Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

**Vol. 66** கர்த்தர் சதா காலங்களிலும் அரசாளுகிறார்; ...... தலைமுறை தலைமுறையாகவும் ராஜரீகம் பண்ணுகிறார். அல்லேலூயா. சங்.146:10 ஜனவரி 2020 No.1

## தேவனுடைய வல்லமையை ஜெபத்தின் மூலம் வெளிப்படுத்துவோம்

***Releasing God's power through prayer***

Wesley L. Duewel (1916-2016)

தேவன் நமக்களித்திருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம் எந்த வேளையிலும் தேவனிடத்தில் கிட்டிச் சேரக்கூடிய சுயாதீனமாகும். நீங்கள் அவரோடு பேசும் உரிமை மட்டுமல்ல, அவரே உங்களை அழைக்கிறார், நீங்கள் அவரிடம் அனுமதிக்கப்படுவது மட்டுமல்ல, நீங்கள் எதிர்பார்க்கப்படுகிறீர்கள். நீங்கள் அவரோடு தொடர்பு கொள்ள அவர் காத்திருக்கிறார். நீங்கள் நினைத்த மாத்திரத்தில் அவரோடு நேரடி தொடர்பு கொள்ள முடியும். தேவன் மனிதர் மீது அதிக பாசம் கொண்டவர். தமது பிள்ளைகளிடம் விசேஷித்த அன்பு காண்பித்து அவர்களோடு எப்போதும் தொடர்பு கொள்ளுகிறார். அவர் நமக்களித்திருக்கும் சில வல்லமைகளாவன :-

**தேவனோடு ஒத்துழைக்கும் வல்லமை:**

தேவன் தமது அனேக சர்வ வல்ல திட்டங்களை நிறைவேற்ற நம்முடைய உதவியைத் தெரிந்துள்ளார். சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக ஒரு பரிசுத்த பங்களிப்பை தேவன் நமக்கு நியமித்திருப்பதாகப் பவுல் அடிக்கடி நினைப்பூட்டுகிறார். இந்தப் பரிசுத்த பொறுப்பினை தேவனோடு இணைந்து நிறைவேற்ற அவர் வலியுறுத்துகிறார். நம்மிடம் சகலவிதமான கீழ்ப்படிதல்கள் நமக்கு மிகவும் தேவையாயினும், அனேக சூழ்நிலைகளில் குறைவுபட்டிருக்கிறோம். விசேஷித்த திறமைகளும் பயிற்சிகளும் கூட நம்மில் நிறைவாயிருப்பதில்லை. ஆனால் ஜெபத்தின் மூலம் நாம் எப்போதும் அவரோடு இணைந்து செயல்பட முடியும்.

ஜெபத்தின் மூலம் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும், எந்த தேவையிலும் அவரோடு ஒத்துழைக்க முடியும். நாம் ஜெபிப்பதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டோம். தேவ கிருபையினாலே நாம் இரட்சிப்படைந்து, ஜெப ஊழியத்தில் பிரவேசிப்பதற்காகவே, தேவனுடைய பிள்ளைகளென்ற உரிமையும் அந்தஸ்தும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் அவரோடு பணி செய்ய அழைக்கப்பட்டு, அவரது விசேஷித்த திட்டத்தை நிறைவேற்ற தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோம்.

"நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள் .....நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாயிருப்பீர்கள்" யாத்.19:5,6 என்று தேவன் சொல்லுகிறார். "நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப் படுவீர்கள்" ஏசா.61:6. "..... தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவர்" வெளி.1:6. எல்லா கிறிஸ்தவர்களும் "பரிசுத்த ஆசாரிய கூட்டம்" 1பேதுரு 2:5 என்றும் அழைக்கப்படுவது ஏன்?

நம்மை ஆசாரியர்களாக்குவதின் நோக்கத்தின் ஒரு பகுதி நாம் அவரை ஆராதித்து அவரைத் துதிக்க வேண்டும் என்பதாகும். இதற்கு மேலாக நாம் ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவும் எதிர்பார்க்கப்படுகிறோம். கிறிஸ்து இன்று உலகத்தை ஜெபத்தின் மூலமாக ஆளுகை செய்கிறார். மற்றவர்களுக்காக மன்றாடினதுபோல (எபி.7:25) நாமும் பிறருக்காக மன்றாட அழைக்கப்படுகிறோம். இவ்வாறு கிறிஸ்துவோடு இணைந்து மன்றாட பரலோக இரக்க சிங்காசன அறை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து மன்றாடுகிறார். நாம் ஏன் மன்றாட வேண்டும்? நமது எளிய ஜெபங்கள் அவரது வல்லமையுள்ள மன்றாட்டுடன் எதைக் கூட்ட முடியும்? தேவனுடைய நித்திய திட்டத்தின்படி அவரது பிள்ளைகளாகிய நாம் அவரது செயலிலும் ஆட்சியிலும் பங்களிப்பவர்களாயிருக்க வேண்டும். நாம் கிடைக்கும் சமயத்தை மன்றாட்டிலும் தேவ பணியிலும் செலவிடாவிட்டால் அவர் நமக்குக் கொடுத்த விசேஷ அழைப்பில் தோல்வியுற்றவர்களாயிருப்போம். நொறுங்கிக் கிடக்கும் உலகுக்காக ஜெபிக்கும் உள்ளம் நமக்கு வேண்டும். தேவனோடு இணைந்து செயல்படுவதற்கு மிகவும் ஏற்ற வழி ஜெபம் ஒன்றே.

**சாத்தானை எதிர்க்கவும் தோற்கடிக்கவும் வல்லமை :**

மனிதருக்கும் தேவனுக்கும் மிகப்பெரிய சத்துரு சாத்தான். "ஏனெனில் உங்கள் எதிராளியான பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான் ......அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்" 1 பேது.5:8-9. உலகில் தீமைகளுக்கெல்லாம் காரணம் அவனே. அவனது அரசில் காணப்படுகிறவர்கள் விழுந்துபோன தூதர்களும், பிசாசுகளும், பாவிகளுமே. கிறிஸ்துவின் பணியாட்களை சோர்படையச் செய்யவும், தாமதப்படுத்தவும் பிசாசு தொடர்ந்து பணியாற்றுகிறான். எந்த விதத்திலும் எதிர்க்கிற அவன் 'பாதாளத்தின் தூதன்' (வெளி.9:11). மக்களையும் இல்லங்களையும் தேசங்களையும் அவரது பணி எட்டாதபடி தடுப்பதே அவனது நாட்டம்.

பிசாசு தன்னோடு ஒரு கூட்டம் அசுத்த ஆவிகளைத் துணையாக வைத்திருக்கிறான். அவை மக்களைத் துன்புறுத்தக்கூடியவை. இயற்கையின் விசை மீது ஆதிக்கம் செலுத்தி பிசாசுக்குரிய சில அற்புதங்களையும் செய்வதுண்டு (2 தெச. 2:9-10) அவனிடத்தில் இருக்கும் தீய அதிகாரத்தைக் கண்டு மிகாவேல் தூதன் ஆண்டவரிடம் அவனைக் கடிந்து கொள்ளும்படி கூறினான் யூதா.9.

தேவன் ஒருவரே அவனைத் தோற்கடித்துக் கீழடக்கக் கூடும். ஆனால் நமக்கும் இந்த வலிமையை வேதபுத்தகம் அளிக்கிறது.

ஆண்டவராகிய இயேசு வேத வசனத்தின் மூலம் இதைச் செய்து காண்பித்தார் மத்.4:1-11. பேதுருவிடம் விழித்திருந்து ஜெபித்து சோதனையில் வெற்றி பெறும்படி அவர் கூறினார் மத்.26:41.

**நாம் விசுவாசத்தில் உறுதியாக நிற்க வேண்டும் :**

யாக்.4:7-ன் படி 'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'. கிறிஸ்து நம்மோடிருந்தால் நாம் சாத்தானை எதிர்க்க முடியும்.

**நாம் ஜெபிக்க வேண்டும்:**

ஜெபமே நமது வலிமையான ஆயுதம். ஜெபம் கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் கொண்டு வருவதால் சாத்தானும் அவனது தூதர்களும் தள்ளப்படுவார்கள். ஜெபம் தேவனுடைய வாக்குத்தத்தங்களால் நமக்கும் அந்தகார சக்திகளுக்கு மிடையில் சுவரை ஏற்படுத்திவிடுகிறது. அது தேவ தூதர்களை நமது உதவிக்கு விரைவாக வரச்செய்கிறது (2 ராஜா. 6:15-17) தானி.10:13; எபி.1:14 சாத்தானுடைய திட்டங்களை எறிந்துவிட்டு அவனது சக்திகளைத் தகர்ப்பது ஜெபமே.

எபேசி 6-ம் அதிகாரத்தில் பவுல் ஆவிக்குரிய போராட்டத்தை விளக்கும் போது, 12-ம் வசனத்தில் "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தில் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" என்கி

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)


Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

*EL SHADDAI*

## இம்மாத பொன்னான சிந்தனை

*Expect great things from God*
*Attempt great things for God*
தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர் பார்!
தேவனுக்காக பெரிய காரியங்களை செய்ய முயற்சி செய்!– வில்லியம் கேரி

## வாக்குத்தத்தம்

என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் யாத்.33:14

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,**

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 ஜனவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன். **வாசகர் அனைவருக்கும் எங்கள் அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள் !**

**“பிரியமானவனே(ளே), உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்”** 3 யோ. 2.

கடந்த ஆண்டு முழுவதும் உங்கள் கண்ணீர் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் தாங்கினீர்கள். “நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினால், என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” மாற்கு 9:41 (மத்.10:42) “கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்” லூக்கா 6:38.

### வருகையின் தூதன் (பத்திரிகை பணி)

இந்த ஊழியத்தின் ஒரு மாத தேவை ரூபாய் 75,000 ஆகும். மாதந்தோறும் இத்தேவை சந்திக்கப்பட தயவாய் ஜெபியுங்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிறபடி **மாதந்தோறும்** உதாரத்துவமாய் தாங்குங்கள்.

நீங்கள் வருகையின் தூதன் பத்திரிகை ஊழியத்திற்கு கடிதங்கள், காணிக்கை அனுப்ப வேண்டிய முகவரி :

**வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001**
**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.

**வங்கி விபரம் :**

Name : **VARUKAYIN THOOTHAN,** A/c. No. : 431521036
Bank : Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : IDIB 000N006

குறிப்பு : வங்கி வழியாக காணிக்கை அனுப்பினால், அலுவலக தொலைபேசி எண் 9543221008-க்கு உடனே SMS அனுப்பவோ 9489740295 என்ற எண்ணுக்கு தெரிவிக்கவோ தயவாய் கேட்கிறோம். வருகிற புதுவருடம் முதல் உங்கள் பெயரில் பதிவு செய்ய அது அத்தியாவசியமாகும்.

### வருகையின் தூதன் (உபவாச ஊழியம்)

கர்த்தர் இம்மட்டும் உபவாச ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறார், தேவைகளை ஆச்சரியமாக சந்திக்கிறார். ஒரு மாத உபவாச ஜெபத்திற்கு ரூபாய் 25,000 தேவை. தேவன் கிருபையாய் தேவையை சந்திக்கவும், உயிர்மீட்சி உண்டாகவும் தயவாய் ஜெபியுங்கள். வங்கி வழியாக காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் :

Name : **WESLEY DEVADASON,** A/c. No. : 370601000002557
Bank : I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA 0000063

### வருகையின் தூதன் (முன்னேற்ற பணி)

இந்த ஊழியத்திற்காக தரிசனத்தோடு கட்டப்பட்ட கட்டடங்களின் ஒரு பகுதி வர்ணம் பூசப்பட்டது. மீதியான பகுதிகளும் வர்ணம் பூசப்பட வேண்டும். கட்டடத்தின் உள் பகுதியில் அநேகம் வேலைகள் செய்யப்பட வேண்டிய திருக்கிறது. இதற்காகவும் ஜெபியுங்கள். வங்கி விபரம்:

Name : **WESLEY DEVADASON,** A/c. No. : 61822200136904
Bank : Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182

குறிப்பு : மேலே அச்சிடப்பட்ட **3** வங்கி கணக்குகளும் ஊழியத்திற்கு உரியது. ஆசிரியர் வங்கி கணக்கு (Personal) தேவையானால் தயவுசெய்து தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

2020-ம் வருட உபவாச ஜெபத்திற்கு உங்கள் சபை கட்டடத்தை ஒரே ஒரு விசை திறந்து தாருங்கள் என்று அநேக தேவ ஊழியர்களை தொடர்பு கொண்டோம், உதவி செய்வார் இல்லை. அதற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**“அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்”** 1 பேதுரு 5:7

**“நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக”** உபாகமம் 1:11

| **2020** | **2020** |
|---|---|
| Year of walking with God | **தேவனோடு சஞ்சரிக்கும் ஆண்டு** |

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

## பெப்ரவரி மாத உபவாச ஜெபம்

காலம் : ***08.02.2020***
இடம் : **Christian Assembly Mission**
71/215, Mettu Street, Ayanavaram, Madras

தொடர்பு : Pastor **C. Victor,** Phone - 2780608
Pastor **David Garden Noble,** Mobile - 8056002334

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2020
## Heart cry for Revival 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 04.01.2020<br>1-வது சனி | NIMS Church<br>Sundarapandiam |
| பெப்ரவரி | 08.02.2020<br>2-வது சனி | Christian Assembly Mission<br>Ayanavaram, Chennai |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜூன் | | |
| ஜூலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | 19.09.2020<br>3-வது சனி | Jesus Cares Assembly<br>Anna Nagar, Chennai |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

**தமிழ்நாட்டிலுள்ள ஊழியர்கள், உங்கள் சபை கட்டிடத்தை ஒரே ஒரு விசை மாத்திரம் எழுப்புதலுக்காக இதய கதறல் 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாருங்கள் என்று அதிக அன்போடு கேட்கிறேன்.**

தொடர்பு : **94897 40295, 94980 30295**

(1-ம் பக்க தொடர்ச்சி)

றார். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் என்று கூறிய அவர் போராட அணிய வேண்டிய வெவ்வேறு ஆயுதங்களையும் கூறுகிறார். போர் செய்ய அவரது ஆலோசனைப்படி வேத வசனமாகிய பட்டயத்தையும் ஆவியினாலே ஜெபம் பண்ணுவதையும் பயன்படுத்தக் கூறுகிறார்.

சாத்தானைத் தோற்கடிக்கவும் முறியடிக்கவும் மிகப்பெரிய யுத்த தந்திரம் ஜெபம். "எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி ...." *எபேசி.6:18.* ஜெபத்தின் மூலம் ஆவியானவர் நம்மை அதிகமாகப் பலப்படுத்துவதால் சாத்தானின் கட்டுகள் அகற்றப்படும். அவனது கிரியைகள் அழிக்கப்படும். அவனது கிரியைகளை அழிக்கவே கிறிஸ்து இவ்வுலகில் வந்தார் *1 யோவா.3:8.* அவர் சிலுவையில் பொறுமையுடன் அழித்தார். அந்த வெற்றி சபையில் ஜெபத்தின் மூலம் செயலாற்றுகிறது. எனவே தேவ ஜனம் தேவ சேனை என அழைக்கப்படுகிறது. ஒருவரோடொருவர் இணைந்து ஆவியின் அபிஷேகத்துடன் மன்றாடினால் சாத்தான் தோற்று ஓடுவான். எழுப்புதல் இறங்கி வரும். இதுவரை இல்லாத ஆத்தும அறுவடை ஏற்படும்.

உபவாசம் ஜெபம் ஆகியவற்றால் நாம் சாத்தானைத் தடுத்து பின்னிட்டு ஓடச் செய்ய வேண்டும். நாமோ ஜெபக்குறைவுள்ளவர்களும் சோம்பல் நிறைந்தவர்களுமாயிருக்கிறோம். சாத்தான் வெற்றிபெற வழிவிடுகிறோம். தேவனே எங்களை உயிர்ப்பியும்! எங்களுக்கு ஜெபிக்கப் போதித்தருளும்! உலகம் முழுவதும் கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கப்பட எங்கள் ஜெபங்கள் காரணமாயிருக்கட்டும். எங்கள் முழங்கால்களாலும் சுவிசேஷப் பணியாலும் புரட்சி ஏற்படட்டும்.

## இயற்கை நியதிகளைக் கடந்து செல்லும் வல்லமை

"ஜெபம் இயற்கையின் நியதிகளைக் கடந்து செல்லக் கூடியது". வாஞ்சையோடு ஏறெடுக்கப்படும் ஜெபத்தின் மூலம் தேவன் அற்புதங்களைச் செய்வார். தேவன் உண்மையாயிருப்பது போல ஜெபமும் உண்மையானது. அவருடைய சித்தத்திற்கு இணங்கி அவரது ராஜ்யத்தை விரிவுபடுத்துகிறவர்களுக்கு தேவன் செய்யக் கூடாதது ஒன்றுமில்லை.

இயற்கைக்கு மேலான தேவ செயல் அற்புதம் எனப்படும். இங்கு தேவனுடைய விசேஷ விருப்பம் தெரிவிக்கப்படுகிறது. அது தேவ பார்வையில் அவரது இன்னொரு பணி. எனவே இயேசு தமது அற்புதங்களை 'கிரியைகள்' என்றார் (*யோவா.9:4; 10:25, 32, 38*) அவர் நித்தியமான திட்டங்களையும், நோக்கங்களையும் உடையவர். அவர் சர்வ வல்லவர். எல்லாக் கிரியைகளையும் நடப்பிக்க அதிகாரமுடையவர். எனவே ஜெபம் பதில் தரக்கூடியது.

ஜெபம் தேவனுடைய அனாதி திட்டங்களோடு ஒத்துப்போவதால் தேவனுடைய அற்புத வல்லமையை நாம் பெற்றுக்கொள்ள முடியும். அவர் ஒரு அற்புதம் செய்யும்போது அவரது சித்தம் நிறைவேறி அவர் மகிமைப்பட ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார். ஆக ஜெபம், அவரது அற்புதம் செய்யும் வல்லமையை மனித தேவைகளுக்குக் கொண்டுவர பயன்படும் அபிஷேகிக்கப்பட்ட முறையாகும்.

## மலைகளை பெயர்க்கும் விசுவாசம்

மலைகள் பெலனையும் உறுதியையும் காண்பிக்க வேத புத்தகத்தில் பல இடங்களில் உவமானமாகக் கூறப்பட்டுள்ளன. கஷ்டங்கள், பிரச்சனைகள், தடைகள் போன்றவற்றையும் அவை சுட்டிக் கொண்பிக்கின்றன. ஆண்டவருக்காக வழியை ஆயத்தம் பண்ண கோணலானவைகள் நேராக்கப்பட்டு, கரடுமுரடானவைகள் சமமாக்கப்பட வேண்டும். அப்போது தேவமகிமை வெளிப்படும் *லூக்.3:4-6, ஏசா.40:5.* தேவனுடைய வல்லமையின் ஆவி கிரியை செய்யும்போது அசைக்க முடியாத பர்வதங்கள் ஒன்றுமில்லாமற் போய்விடும் *சக.4:6-7.* இதை தூய ஆவியானவர் மட்டுமே நிறைவேற்ற முடியும். கூடாதவைகள் என்று எண்ணப்படும் மலைகளை ரஸ்தாக்களாகவும், ராஜபாதையாகவும் மாற்றி வேகமாக முன்னேறச் செய்வார் *ஏசா.49:11.*

இயேசு தமது போதனைகளில் அனேக திருஷ்டாந்தங்களை பயன்படுத்தினார். ஒரு சிறுவனிடம் காணப்பட்ட பிசாசினை சீஷர்களால் துரத்த முடியாமற் போனபோது இயேசு அவர்களைப் பார்த்து கடுகு விதையளவு விசுவாசம் அவர்களிடமிருந்தால் மலை கூட இடம்பெயரும் என்றும் அவர்களால் கூடாதது எதுவும் இருக்காது என்றும் கூறினார் *மத்.17:20.* இந்த வகையான பிசாசு ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி வேறெந்த விதத்திலும் போகாது என்றும் கூறினார் *வச.21.*

மேலும் கனிகொடாத அத்தி மரத்தை இயேசு சபித்தபோது, அது உடனே பட்டுப்போனதைக் கண்டு இயேசுவின் வல்லமையைக் குறித்து சீஷர்கள் ஆச்சரியமடைந்தபோது அவர்கள் மலைகளைக் கூட பெயர்க்க முடியும் என்றும் "ஆதலால் நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ அவை களைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்" *மாற்.11:24* என்றும் குறிப்பிட்டார்.

தமது பிள்ளைகள் மலைகளைப் போன்ற துன்பங்களை எதிர்கொண்டு அவற்றை அகற்ற வேண்டுமென்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. நாம் அவைகளால் தடை பண்ணப்படாமல் அவற்றை சவாலாக எடுத்துக்கொண்டு அவைகளை தேவநாம மகிமைக்காக ராஜபாதையாக மாற்றவோ, அல்லது கடலில் அமிழ்த்தி அவை இருந்த இடம் தெரியாமற் போகவோ செய்ய வேண்டும். மலைகளைப் பெயர்க்கவும், அப்புறப்படுத்தவும் தொடர் ஜெபமும் உபவாசமும் தேவை. தூய ஆவியானவர் அற்புதங்களைச் செய்வார். நம்முடைய பெலத்தினாலும் பராக்கிரமத்தினாலும் இத்தகைய செயல்களைச் செய்ய முடியாது *சக.4:6.*

நாம் நமது சொந்த ஞானம், திறமை, முயற்சி ஆகியவற்றின் மீது சார்ந்து காணப்படுவதால் நூற்றுக்கணக்கான மலைகள் இன்று சுவிசேஷப் பணியினையும், சபைகளையும் முன்னேற விடாமல் தடுக்கின்றன. உபவாசித்து ஜெபிப்பதைத் தவிர வேறு எல்லாக் காரியங்களையும் நாம் செய்கிறோம்! ஆனால் தூய ஆவியானவருடைய உதவியையே நாடவேண்டும்.

## ஆசீர்வதிக்கும் வல்லமை

வேதபுத்தகத்தின் மூலம் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறவர். அது முழுவதும் வாக்குத்தத்தங்களால் நிறைந்திருக்கிறது. தேவன் அவற்றை நிறைவேற்றுகிறார். சிலவேளைகளில் மட்டும் சீர்திருத்தவும், கண்டிக்கவும் வேண்டிய சூழ்நிலைகளைத் தவிர அவருக்குக் கீழ்ப்படிகிற பிள்ளைகளை அவர் எப்போதும் ஆசீர்வதிக்கிறார்.

*அப்.10:38*-ன்படி அவர் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். நாமும் நம் வாழ்வில் நம்மால் இயன்ற மட்டும் பிறருக்கு ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறவர்களாயிருக்க வேண்டும். நாம் நமது நற்கிரியைகளாகிய ஆசீர்வாதங்களைப் பிறருக்குச் செய்வதால் இயேசுவின் சீஷர் என்று அறியப்பட வேண்டும். (*மத்.5:16, எபே.2:10, 1 தீமோ.6:18, 2 தீமோ.3:17* ஆகிய வசனங்களைப் படியுங்கள்)

கிறிஸ்தவன் பிறருக்கு ஆசீர்வாதங்களைக் கொண்டு வர முக்கிய வழி ஜெபம். வேறு எந்த வழியிலும் தொடர்பு கொள்ள இயலாதவர்களுக்காகவும் ஜெபிக்கலாம். நமது தேசத் தலைவர்கள், சபைத் தலைவர்கள், எளியோர், தேவையிலிருப்போர், கஷ்டங்களிலிருப்போர் போன்ற அனைவருக்காகவும் ஜெபத்தின் மூலம் ஆசீர்வாதங்களைப் பெற்றுத்தர முடியும். அடிக்கடி சந்திக்கிற குடும்ப அங்கத்தினர், நண்பர்கள் போன்றவர்களுக்கு மட்டுமல்ல, எப்போதாவது சந்திக்கிறவர்கள் அல்லது கேள்விப்படுகிறவர்களுக்காகவும் ஜெபிக்கலாம். "எனக்காக ஜெபியுங்கள்" என்று கேட்டுக் கொள்கிறவர்களுக்காகவும் ஜெபிப்பதால் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட முடியும்.

கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படும் நீங்கள் வாழ்நாள் முழுவதும் பிறரை ஆசீர்வதிக்கிறவர்களாகவே இருக்க வேண்டும். உங்கள் இடைவிடாத ஜெபத்தால் நதிபோன்ற ஆசீர்வாதங்களையும், புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் நீங்கள் செல்லுமிடமெல்லாம் பரவச் செய்ய முடியும். சமயமும் வாய்ப்புமிருந்தால் எத்தனை பேரை ஆசீர்வதிக்க முடியுமோ அத்தனை பேரை ஆசீர்வதியுங்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

கலா.6:10. நீங்கள் இருக்குமிடம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும். நீங்கள் உத்தமமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாயிருந்தால் உங்கள் நாட்களை ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும் நாட்களாக தேவன் மாற்றித்தருவார்.

1600-களில் வாழ்ந்த பிரசித்தி பெற்ற ஒரு அன்பான ஆங்கில மருத்துவர் சா.தாமஸ் பிரௌனீ. இவர் இடைவிடாமல் பிறரது ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தவர். "நான் வாழும் இப்பட்டணத்தில் நான் தேவனை அறிந்ததே இல்லை என்று ஒரு பகுதி மக்களும் சொல்லாதபடிக்கு நான் அதிகமாக ஜெபிக்கத் தீர்மானித்து, வீட்டிலும், ரஸ்தாவிலும், தெருக்களிலும், குறுகிய பாதைகளிலும் ஜெபித்தேன்" என்று அவர் கூறியிருக்கிறார்.

எனது பாதையில் நான் ஒரு ஆலயத்தைக் கடந்து சென்றால், அங்கு மக்கள் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்றும், அங்கு அதிகமான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் ஜெபிப்பேன். என்னிடத்தில் மருத்துவத்திற்காக வரும் நோயாளிகளுக்காகவும் பிற மருத்துவர்களிடம் செல்லும் நோயாளிகளுக்காகவும் ஜெபிப்பேன். ஒரு இல்லத்தில் பிரவேசித்தால் அங்கு தேவ சமாதானம் தங்கியிருக்க வேண்டுமென்று ஜெபிப்பேன். ஒரு பிரசங்கத்தைக் கேட்டபின், தேவ சத்தியத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், செய்தியாளரை தேவன் அதிகமாக பயன்படுத்தும்படியாகவும் ஜெபிப்பேன். ஒரு அழகிய நபரைப் பார்த்தால் தேவன் அவரை அழகாகப் படைத்ததற்காக அவரைத் துதிப்பதோடு அந்நபருக்கு உள்ளான தெய்வீக அழகைக் கொடுக்கும்படி அவருக்காகவும் ஜெபிப்பேன். அங்கவீனமான ஒருவரை சந்தித்தால் அவரது ஆத்துமா பரிபூரணமாயிருக்கவும், உயிர்த்தெழுதலின் அழகு அவரில் அளிக்கப்படவும் ஜெபிப்பேன்.

ஆபிரகாமிடம் தேவன் தான் அவனை ஆசீர்வதிப்பதாகவும், அனேகருக்கு ஆசீர்வாதமாக ஆக்குவதாகவும் வாக்களித்தார் ஆதி.12:2. இது நமக்கும் அனுபவமாக வேண்டும். தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்போது நாம் பிறருக்கு ஆசீர்வாதமாயிருப்பது அவசியம். ஆசீர்வாதத்திற்கான முக்கிய பாதை ஜெபம். பிறருக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்கவும் அதுவே ஏதுவாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஜெபத்தின் மூலம் பிறரை ஆசீர்வதித்து, தேவன் உங்களுக்கு அளித்திருக்கும் அளவில்லாத வல்லமையைப் பற்றிக் கொள்ளுங்கள்.

**வேத புத்தகம் தங்கமயமான வாக்குத்தத்தங்களால் நிறைந்திருந்தாலும் அவை ஜெபமாக மாற்றப்படாவிட்டால் செயலற்றிருக்கும். இவை விவாதிக்கப்பட வேண்டியவையல்ல, அழுத்தமாக சொல்லப்பட்டு செயல்படுத்தப் பட வேண்டியது அவசியம்**

# வாக்குத்தத்தமும் ஜெபமும்!

## *Promise and Prayer*

Arthur Petric

'கிறிஸ்தவனின் பரிபூரணம்' என்ற தமது நூலில் ஜாண் வெஸ்லி 'ஜெபத்திற்கு தேவன் பதில் தருகிறார்' என்று குறிப்பிட்டுள்ளார். தேவனுடைய திட்டத்திலும், நிகழ்ச்சிநிரலிலும் ஜெபம் ஒரு முக்கிய இடத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதை வேதபுத்தகம் நமக்குப் போதிக்கிறது. ஒரு அதிகாரம் முழுவதும் வாக்குத்தத்தங்களைக் கூறியபின், இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அனுக்கிரகம் செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும் எசே.36:37 என்று தேவன் கூறினார். தேவன் தமது வாக்குகளை நிறைவேற்ற அவர் நியமித்த ஒரே இரகசிய வழி ஜெபம். மாத்யூ ஹென்றி என்பவர், "நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஜெபமாக மாற்றினால் அவை சாதனைகளாக மாறிவிடும்" என்கிறார். F.B.மேயர் என்பவர் "வேத புத்தகம் தங்கமயமான வாக்குத்தத்தங்களால் நிறைந்திருந்தாலும் அவை ஜெபமாக மாற்றப்படாவிட்டால் செயலற்றிருக்கும். இவை விவாதிக்கப்பட வேண்டியவையல்ல, அழுத்தமாக சொல்லப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டியது அவசியம்" என்று எழுதுகிறார். மேலும் "தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடக்கி வைத்துக் கொள்வதற்காக அல்ல ஜெபத்தைத் தூண்டுவதற்காகவே" என்றும் அவர் குறிப்பிடுகிறார். ஆவிக்குரிய உலகத்தில் ஒரு முக்கிய நியதி "வாக்குத்தத்தங்களைக் குறித்துப் போதிப்பதும், ஜெபிப்பதும் இணைந்து செயல்பட வேண்டும்" என்பதாகும்.

**வேத வசனத்தில் காணப்படும் திருஷ்டாந்தங்கள்:**

**1. 1 ராஜாக்கள் 18**

தேவன் எலியாவிடம் திட்டமாக 'நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார்' வச.1, எலியா கீழ்ப்படிந்தான். அதோடு கூட அவன் ஜெபித்தான்! எப்படி ஜெபித்தான்! "நீர் போம், போஜன பானம் பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது" என்ற வார்த்தைகள் செவியில் ஒலித்துக் கொண்டிருந்த போதே ஆகாப் போஜனபானம் பண்ண போனான், எலியாவோ கர்மேல் பர்வதத்தின் சிகரத்தில் ஏறி ஜெபித்தான் வச.42. இந்நாட்களிலும் அனேகர் புசிக்கவும் குடிக்கவும் செல்லும்போது ஜெபிக்கச் செல்கிறவர்கள் ஒரு சிலர் மட்டுமே.

மழை வாக்குத்தத்தம் பண்ணப்பட ஜெபம் நிபந்தனையாயிருக்கவில்லை. எலியா ஆகாபை அனுப்பிவிட்டு தேவன் தமது வாக்கை நிறைவேற்றட்டும் என்று சென்றுவிடவில்லை. அவன் மழைக்காக ஜெபிக்க ஆரம்பித்தான். வாக்குப் பண்ணப்பட்ட மழை வருகிறதா என்று பார்க்க வேலைக்காரனை ஏழு முறை அனுப்பினான். அவனோ தரையிலே பணிந்து தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து ஜெபித்துக் கொண்டிருந்தான். ஆண்டவரே நீர் வாக்குப் பண்ணின மழையை அனுப்பும் என்றுதான் அவன் ஜெபித்திருப்பான். வேலைக்காரன் மழையின் அடையாளத்தையே காணவில்லை என்று ஒவ்வொரு முறை சொல்லும்போதும், அவனை மறுபடியும் மறுபடியும் போகச் சொல்லிவிட்டு ஜெபித்துக் கொண்டே இருந்தான். தேவன் வாக்களித்துவிட்டாரே! ஏன் ஜெபிக்க வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? ஆவிக்குரிய உலகத்தில் முக்கிய நியதி இங்குதானிருக்கிறது. தமது வாக்குகளை நிறைவேற்ற நாம் ஜெபிப்பதை தேவன் எதிர்பார்க்கிறார்.

**2. தானியேல் 9-ம் அதிகாரம்**

வாக்குத்தத்தத்திற்கும் ஜெபத்திற்குமுள்ள தொடர்பை காண்பிக்கும் அரிய ஒரு அத்தியாயம் இது. தானியேல் எரேமியா தீர்க்கனின் 29-வது அதிகாரத்தைப் படித்துவிட்டான். 10-ம் வசனத்தில் "பாபிலோனிலே 70 வருஷம் நிறைவேறின பின்பு நான் உங்களை சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பி வரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன்" என்ற வாக்கு காணப்படுகிறது. இதைக் குறிப்பிட்டு தானியேல் 9-ம் அதிகாரத்தில் "..... தரியு ராஜ்யபாரம் பண்ணுகிற முதலாம் வருஷத்திலே தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்கடிப்புகள் நிறைவேறித்தீர எழுபது வருஷம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கனோடே சொல்லிய வருஷங்களின் தொகையை புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன்" தானி.9:1-2. தானியேல் தனது எபிரெய நண்பர்களை அழைத்துத் தங்கள் சிறையிருப்புக் காலம் முடிவுபெறுவதற்காக சந்தோஷங்கொண்டாடவில்லை. ராஜா தங்களை விடுவிப்பதற்கான ஆணையை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கவுமில்லை. வேதபுத்தகத்தில் காணப்படும் மிகவும் ஊக்கமான ஒரு ஜெபத்தை அவன் ஏறெடுத்தான் தானி.9:3-19 படிக்க. இந்த ஜெபம் தேவ கரங்களை அசைத்தது. ஒரு தூதன் பரத்திலிருந்து பறந்து வந்து தானியேலுக்கு பதிலைக் கொடுத்தான்.

இந்த ஜெபத்தை நீங்கள் படித்துப் பார்த்தால் நிச்சயமாக ஒரு தூண்டுதலைப் பெறுவீர்கள். தானியேலின் ஜெபத்தின் மூலமாகவே வாக்குத்தத்தம் நிறைவேறியது என்று தோன்றச் செய்கிறது. யூதர்கள் திரும்பி வருவதை தேவன் வாக்குப் பண்ணினாலும் அது நிறைவேற ஜெபம் காரணமாயிருந்தது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. எரே.29:12-ல் குறிப்பிட்டபடி, "அப்பொழுது நீங்கள் கூடிவந்து

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள், நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்". இதனை அறிந்து தானியேல் ஜெபித்தான். 'பின்பு' என்பது சிறையிருப்பின் முடிவு காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அது எரே.29:10,12 வசனங்களில் சொல்லப்படுகிறது. காலம் நிறைவேறிய போது அவர்கள் ஆண்டவரை நோக்கி ஜெபிக்க வேண்டியதாயிற்று, தேவன் பதிலளித்தார்.

"நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களை துரத்திவிட்ட எலலா ஜாதிகளிலும், எல்லா இடங்களிலுமிருந்து உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும், எல்லா இடங்களிலுமிருந்து உங்களை சேர்த்து நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்ப வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" எரே.29:14.

எரே.29:10, 14 மற்றும் தானி.9:2-3 ஆகிய வசனங்கள் வாக்குத்தத்தங்களும் ஜெபமும் இணைந்தே செல்லுகின்றன என்பதை நமக்கு போதிக்கின்றன. தேவன் தமது வாக்குகளை நிறைவேற்ற நமது ஜெபத்தை எதிர்பார்க்கிறார். இதைக் குறித்து மாத்யூ ஹென்றி "தேவன் தமது ஜனங்களுக்குத் தாம் எதிர்பார்க்கிற நன்மையைக் கொடுக்கவிருக்கும்போது அவர் ஜெப ஆவியையும் ஊற்றிக் கொடுக்கிறார்" என்று கூறுகிறார்.

டேவிட் பிரெய்னார்டு 1744 ஜூன் 30-ம் நாள் ஒரு பத்திரிகையில் "எனது ஆத்துமா தேவ வசனத்தை வாசிப்பதில் கவனமாயிருந்தது. குறிப்பாக தானி.9-ம் அதிகாரத்தை வாசித்த போது, தேவன் தமது சபைக்கு ஏதேனும் இரக்கத்தைக் கட்டளையிட எண்ணும் போது, தமது ஊழியக்காரரை அழைத்து அவரோடு போராட செய்கிறார் என்பதை கண்டுகொண்டேன்" என்று எழுதியிருக்கிறார்.

இதுவே தானியேலிடம் காணப்பட்டது. தேவ வாக்கு நிறைவேறும் காலம் வந்துவிட்டது என்று கண்ட போது அதற்காக ஜெபத்தில் போராடினான். தேவன் பதிலளித்தது மட்டுமின்றி தமது உத்தமத்தை வெளிப்படுத்தி தமது ஜனங்களுக்கு தேவ வாக்கு நிறைவேற 'ஆவிக்குரிய உலகின் ஒரு முக்கிய நியதி ஜெபம்' என போதித்துவிட்டார்.

### 3. வெளிப்படுத்தல் 22:20

இங்கு குறிப்பிடப்படும் வாக்கு 'நிச்சயமாகவே நான் சீக்கிரம் வருகிறேன்' என்பது. அதைத் தொடர்ந்து வரும் ஜெபம், 'ஆமென் ஆண்டவராகிய இயேசுவே வாரும்' என்பது. J.A. ஸெயிஸ் என்பவர் "இது வாக்குத்தத்தங்களின் வாக்குத்தத்தம், வாக்குத்தத்தங்களின் மகுடம், சுவிசேஷ பணிகளின் முடிசூட்டுதல், அனைத்து வாக்குத்தத்தங்கள், ஜெபம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை" என்று குறிப்பிடுகிறார்.

தேவனோடு இணைந்து வாழ்ந்தவர்கள் வாக்குத்தத்தங்களை ஜெபித்து செயல்படுத்தியவர்கள். யோவானின் இருதயம் தேவனோடு மிகச் சரியாக இருந்தபடியால் கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தைக் கேட்டபோது உடனடியாக மகிழ்ச்சியுடன் ஜெபித்தான். தேவன் வானத்திலிருந்து நோக்கிப் பார்த்து தமது வாக்குகளை நிறைவேற்ற யாருடைய இருதயத்தில் ஜெப ஆவியை ஊற்றுவது என தேடிக் கொண்டிருக்கிறார். "தம்மைப் பற்றிய உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது" 2 நாளா. 6:9. இத்தகைய உள்ளங்களில் தேவ ஆவியானவர் ஜெப ஆவியை ஊற்றுகிறார். ஜெபம் என்பது ஆண்டவருக்கு முன்பாக நாம் மூச்சுவிடுவது போன்றது. அது தேவ ஆவியானவரால் நமக்குள் ஊதப்பட்ட சுவாசம். தேவனுடைய வாக்கை நிறைவேற்ற ஜெபிக்கிற மக்களாக நம்மை தேவன் மாற்றுவாராக.

## ஜெபம் தேவகரத்தை அசைக்கிறது

***Prayer moves the arms of God***

T.T. Shields (1873-1955)

எழுப்புதல் ஏற்படுவதற்கு முன்னால் ஜெபம் அதிகமாக வேண்டும். நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று நீண்ட ஆராய்ச்சி பண்ண தேவையில்லை. நாம் ஜெபிக்க வேண்டும் அவ்வளவு தான் அதன் பொருள். ஜெபிக்கத் தெரியுமோ, தெரியாதோ நாம் ஜெபிக்க வேண்டும். மத்.15:25-ல் ஒரு பெண் 'ஆண்டவரே எனக்கு உதவி செய்யும்' என்று அவரைப் பணிந்து கொண்டாள். இது ஒரு உண்மையான ஜெபம்! இன்னொருவன், 'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' லூக்.18:13 என்று கதறினான். இது இன்னொரு உண்மையான ஜெபம்.

ஜெபம் என்பது தேவனோடு பேசுவது, நமது வார்த்தைகள் கடினமாக இருந்தால் அவர் மன்னிப்பார். தவறுதலாக தப்பான ஒரு காரியத்தைக் கேட்டாலும் மன்னிப்பார். ஆனால் நாம் ஜெபிக்க வேண்டும். ஜெபித்துக் கொண்டேயிருப்பதால் நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ள முடியும். தனியறை ஜெபம், தனி ஜெபம் எல்லாம் தேவை. இதற்காக யாரிடமும் சென்று கற்றுக் கொள்ள தேவையில்லை. உங்கள் அறையிலேயே ஜெபிக்க ஆரம்பியுங்கள். உங்கள் இருதயத்தில் எழுப்புதல் ஏற்படும் வரை தொடர்ந்து ஜெபியுங்கள். தீர்மானத்தோடு ஜெபியுங்கள்.

பின்பு இதனை சபையில் செயல்படுத்துங்கள். நீங்கள் ஒரு போதகராக இருந்தால் ஜெப ஊழியத்திற்கு முதலிடம் கொடுங்கள். பிற காரியங்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஜெப கூடுகைகளை நடத்துங்கள். உங்கள் பிரசங்கம் முன்மாதிரியான வாழ்வு ஆகியவற்றால் ஜெபத்தை மகிமைப்படுத்துங்கள். ஜெபத்திற்காக எல்லாவற்றையும் விட்டுக்கொடுக்கத் தீர்மானம் பண்ணுங்கள்.

### ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

நீங்கள் ஒரு சாதாரண சபை அங்கத்தினராயிருந்தாலும் சபையில் எழுப்புதலில்லை என்றால் நீங்களே ஜெபிக்க ஆரம்பியுங்கள். உங்கள் சபையிலேயே தேவசமூகத்திலிருந்து அபிஷேகம் பெற வாஞ்சையுள்ள மக்களைக் கண்டுபிடிக்க முடியும். அவர்களை உங்களோடு இணைந்து ஜெபிக்க அழையுங்கள்.

இந்த வாக்குத்தத்தம் இரண்டு மூன்று பேருக்கு அளிக்கப்பட்டது (மத்.18:19-20) இதற்குரிய நிபந்தனைகள் ஏற்கெனவே உங்கள் இல்லத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். கணவனும் மனைவியும் இணைந்து ஜெபிக்கலாம். பிறர் உங்களைப் மதப் பித்தர்கள் என்று கூறலாம். ஆனாலும் நீங்கள் அனைவரையும் ஜெபிக்கும்படி வற்புறுத்துங்கள்.

### ஜெபம் ஒரு மனப்போங்கு மட்டுமல்ல அது ஒரு செயல்

நீங்கள் ஜெபிக்கும்போது தேவன் பதிலளிப்பாரென எதிர்பாருங்கள். பொது இடங்களில் பண்ணப்பட்ட அனேக ஜெபங்கள் ஆண்டவருக்கல்ல, மனிதருக்கே ஏறெடுக்கப்பட்டவையாயிருந்தன. அனேகர் தங்கள் மனதில் எழும்புகிற ஜெபத்தின் தாக்கத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். ஜெபம் தேவனோடு நம்மை ஐக்கியப்படுத்துவது உண்மைதான். ஆனால் அது தேவகரத்தை அசைப்பது உங்களுக்குத் தெரியுமா? ஜெபம் பிசாசுகளைத் துரத்தும், வியாதிகளை குணமாக்கும், புயலை அமர்த்தும், பரத்திலிருந்து அக்கினி இறங்கி வரச்செய்யும்.

நாம் ஜெபிக்கும்போது விசுவாச மனநிலையைக் காத்துக் கொள்ள வேண்டும். ஜெபிக்கும் முன்பும், ஜெபிக்கும் போதும், ஜெபித்த பின்பும் தேவ வசனத்தை சார்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு விசுவாசம் மிகுந்த ஒரு மனநிலையோடு உங்கள் விண்ணப்பங்களை கிருபாசனத்தின் முன் வைக்க வேண்டும்.

தேவ ஆவியானவர் சபை வாழ்வில் அதிக அளவில் வெளிப்பட்டபடியால், தேவ பிரசன்னத்தையும், வல்லமையையும் காண மக்கள் தேவனுடைய வீட்டில் ஆராதனைக்காகக் கூடி வருவதை நாங்கள் கண்டிருக்கிறோம். ஊழியக்காரர் பிரசங்க பீடத்திற்குச் செல்லும் போது மக்கள் எதிர்பார்ப்புடனிருப்பதையும், அவர்கள் எதிர்பார்த்த படி ஆவியானவர் இறங்கி வருவதையும் கண்டிருக்கிறோம். தாகமுள்ள நிலத்தின் அழுகையை பரலோகம் கேட்டு ஆசீர்வாத மழை பொழிகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

மக்கள் ஜெபம் பண்ணுமிடங்களிலெல்லாம் தேவன் கிரியை செய்கிறார். ஜெபிக்கிற ஒரு சபை தேவ வசனத்தின் மீது புதிய வாஞ்சையை உடையதாகிறது. வேத வாசிப்பும் ஜெபமும் இணைந்தே இருப்பதையும் கண்டிருக்கிறோம். இவ்வாறு ஜெபத்தின் மூலம் எழுப்புதல் ஆரம்பித்து, ஆவியின் பட்டயம் கிரியை செய்கிறது.

மக்களை சந்தோஷப்படுத்துவதும், கிறிஸ்துவின் மார்க்கத்தை பிரபலப்படுத்துவதுமான முயற்சிகளையெல்லாம் ஒதுக்கிவிடுவோம். சுவிசேஷத்தின் எளிமையான தேவவசனத்தைப் போதிப்போம். இதற்கு ஆவியானவர் வெளிப்பட்டு வல்லமை விளங்க வேண்டும்.

சுவிசேஷம் மனிதரை மனந்திரும்பவும், பாவத்தை விட்டுவிடவும் அழைக்கிறது. அது மக்களை கெத்சமனேக்கும் கல்வாரிக்கும் அழைக்கிறது. அது கிறிஸ்துவின் சீஷரை தன்தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற அழைக்கிறது. சிலுவை என்பது அறையப்படுவதும் இரத்தம் சிந்துவதுமான ஒரு அனுபவம். அப்.2-ம் அதிகாரத்தையும் யோவான் 9-ம் அதிகாரத்தையும் படிப்போம். சிலுவையின்றி கல்லறையில்லை. கல்லறை திறக்கப்படாவிட்டால் பரலோகம் திறக்கப்படாது.

கர்த்தருடைய பாதைகளில் திரளான பதிலீடுகள் செய்யப்பட்டுள்ளன. வல்லமைகள் மேலும் அதிகாரங்கள் மேலும் மகிமையான வெற்றிகள் பெறப்பட்டுள்ளன. பாடுபடும் மனித குமாரர்களால் எவ்வளவு திரளான ஊழியங்கள்! கர்த்தருடைய தூதர்களோடு சந்தோஷமான உறவுகள்! பிதா குமாரன் ஆவியோடுள்ள அளவில்லாத மகிழ்ச்சியான ஐக்கியம்!

கிறிஸ்துவின் சபை என்றால் என்ன? தொடர்ந்து கிறிஸ்துவினைப் போதிப்பதற்கும், பிரசங்கிப்பதற்கும் உலகத்திற்குள் அனுப்பப்பட்டவர்களின் கூட்டம் அல்லவா? அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக அழைக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டவர்கள். எனவே நாம் புதிய ஏற்பாட்டின் திட்டத்திற்குள் செல்லுவோம். வேத புத்தகத்தை முழங்காலில் நின்று படிப்போம். தூய ஆவியானவரின் வல்லமையைத் தவிர எந்த வல்லமையையும் சார்ந்திராதிருப்போம். அப்போது ஆண்டவர் நம்மை சந்திப்பார். தூய ஆவியானவரின் வல்லமை அப்போஸ்தலர் காலம்போல வெளிப்படும். ஒவ்வொரு நாளும் மக்கள் சபையில் இரட்சிக்கப்பட்டு சேர்த்துக் கொள்ளப்படுவர். "பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் சக.4:6.

**இந்நாட்களிலும் அனேகர் புசிக்கவும் குடிக்கவும் செல்லும்போது ஜெபிக்கச் செல்கிறவர்கள் ஒரு சிலர் மட்டுமே.**

# ஜெபத்திற்கான ஒரு ஆவல்

## *A passion for prayer*

Samuel Chadwick

*1882-ம்* ஆண்டில் எனக்கு ஏற்பட்ட ஒரு அனுபவம் எனது வாழ்வை ஒரு புதிய புரிந்துகொள்ளுதலுக்கும் வல்லமைக்கும் வழிநடத்தி உயர்த்தியது. என்னால் முடியாத ஒரு பணி தேவையின் உணர்வுக்கு என்னை விழிப்படையச் செய்தது. சேவையிலோ, ஜெபத்திலோ வல்லமையும், சத்துவமும் என்னிடத்திலில்லை. சேவை செய்வதற்கான வல்லமையைப் பெற்றுக்கொள்ள நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். தேவன் ஜெபத்தால் என்னைத் தரிப்பித்து எனக்கு பதிலளித்தார். எனக்கு ஜெபிக்கத் தெரியும் என்றும், என்னை அவர் அனுப்பிய பணிக்காக அதிகமாக ஜெபித்தேன் என்றும் எண்ணிக் கொண்டிருந்தேன். நான் தேவ வல்லமையை நாடினபோது என் கண்கள் திறக்கப்பட்டு, என் காதுகளும் திறந்தன.

இதுவரைக் கேளாத சாட்சிகளைக் கேட்டேன். வல்லமையின் வரம் தூய்மை வாழ்வுடன் தொடர்புடையது என்று கூறுவது எனக்கு புரியாமலிருந்தது. நான் வாஞ்சித்தது வல்லமை. நான் வெற்றி பெறவும், வெற்றி ஒன்றினையே கருத்தில் கொண்டு வல்லமையை வாஞ்சித்தேன். என் வெற்றியால் ஆலயம் நிரம்பவேண்டும், ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும், சாத்தானின் கோட்டைகள் உடைக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தேன்.

நான் வாலிபனாயிருந்தேன். நான் மிகவும் ஆத்திரமடைந்தேன். நாங்கள் பன்னிரெண்டு பேராக சேர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தோம். தேவன் எங்களை பெந்தெகோஸ்தின் அனுபவத்திற்குள் வழிநடத்தினார். என் மனம் விழிப்படைந்தது. என் இருதயம் சுத்திகரிக்கப்பட்டது. ஒரு புதிய ஆனந்தம், புதிய அன்பு, புதிய உருக்கம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டேன். வேத புத்தகமும் அதின் செய்திகளும் எனக்குப் புதிதாயின. எல்லாவற்றிற்கும் மேலாக, புதிய புரிந்து கொள்ளுதலையும், தேவ ஐக்கியத்தின் நெருக்கத்தையும், ஜெப வாழ்வின் ஆழமான அனுபவத்தையும் பெற்றேன். ஆவியில் ஜெபிக்கக் கற்றுக் கொண்டேன்.

### ஆவியானவரின் ஒத்துழைப்பு

ஆவியானவரின் செயல் எப்போதும் ஒத்துழைப்பதாயிருக்கிறது. அதாவது அவர் தனியாக செயல்படுவதில்லை. அவரது மத்தியஸ்தத்திற்காகவும், சத்தியத்தை விளங்கச் செய்வதற்காகவும் அவரது சித்தம் செய்யப்படவும் இந்த ஒத்துழைப்பு தேவை. அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் வாசம் பண்ணுகிறவர். தூய ஆவி தமக்கு நியமிக்கப்பட்ட சரீரத்தில் வாழுகிறார். தேவ பிள்ளைகள் அவரால் தூண்டப்படும்போது சத்திய ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தல் ஏற்பட்டது. வசனம் தேவ ஆவியானவருடையது. ஆனால் எழுத்துக்கள் மனித கரங்களால் எழுதப்பட்டன.

இந்த இருவகையான செயல்களும் கிறிஸ்து இயேசுவின் மீட்பின் செயலிலும் காணப்படுகின்றன. நமது ஆண்டவர் ஒரு கன்னியின் வயிற்றில் அவதரித்தாலும் அவர் பரிசுத்த ஆவியால்தான் கர்ப்பவதியானார். யோசேப்பின் இல்லத்தில் வளர்த்தியிலும் அறிவிலும் தேறினார். தூய ஆவியானவரால் போதிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டார். அவருடைய போதனைகளும் ஊழியமும் தூய ஆவியானவராலே நிறைவேற்றப் பட்டன. ஆவியானவரால் அவர் பாவமில்லாதவராக வாழ்ந்தார். இறுதியில் ஆவியானவராலே உயிரோடெழுப்பப்பட்டார்.

இந்த ஒத்துழைப்பை இரட்சிப்பின் எல்லா அனுபவத்திலும் காணலாம். ஒரு தெய்வீக காரணியும் ஒரு மனித காரணியும் இணைந்து காணப்படும் இருவகையான சாட்சி, இருவகையான நடத்துதல், இருவகையான பணி, இருவகையான மன்றாட்டு ஆகியவை இவற்றில் அடங்கும். நாம் ஆவியில் ஜெபிக்கும்போது ஆவியானவர் நமக்காக மன்றாடுகிறார்.

### ஜெபத்தில் ஆவியானவரின் ஐக்கியம்

தூய ஆவியானவர் தாமாக எதையும் செய்வதில்லை. தமக்காகவும் அவர் எதையும் செய்வதில்லை. அவரது பணி கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதாகும். அவர் செய்வதெல்லாம் கிறிஸ்துவின் நிறைவு பெற்ற பணியை ஆதாரமாகக் கொண்டவை. இயேசு மகிமைப்படும் வரைக்கும் அவர் அருளப்பட முடியவில்லை. முடிசூட்டப்படாமல் பெந்தெகோஸ்தே அனுபவமுமில்லை. ஆவியானவர் இயேசுவின் முடிசூட்டுதலின் பரிசு, பிதா அவரை ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் முடிசூட்டினார்.

ஜெபத்தில் ஆவியானவரின் ஐக்கியம் ஏற்பட கிறிஸ்துவில் அனுபவம் வேண்டும். இதைக் குறித்து ரோமர் 8:9-27 வசனங்களில் படிக்கிறோம். ஆவியில் ஜெபிக்கிறவர்கள் ஆவியின்படி நடக்க வேண்டும். மேலும் தேவ ஆவி நமக்காக மன்றாட அவர் நம்மில் வாசம் பண்ண வேண்டும். மாம்சத்தில் வாழ்ந்தால் சாவோம். ஆவியால் நடத்தப்பட்டு மாம்சத்தின்படி வாழாமல் ஆவியின்படி வாழ்ந்தால் ஆவியானவர் நம்மில் வாசம் பண்ணி நம் மூலமாகக் கிரியை செய்வார்.

"அந்தப்படி ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்; நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்". ரோமர் 8:26-27 வசனங்கள் நமது அனுபவத்தில் வரும்.

தூய ஆவியானவர் தேவனுக்குரிய ஆழமான சத்தியங்களை ஆராய்ந்து பார்க்கிறார். அவர் கிறிஸ்துவினுடையவைகளை எடுத்து வெளிப்படுத்துகிறார். ஆவியானவரின் சிந்தையை தேவன் அறிவார். நாம் ஆவியில் ஜெபிக்கும்போது அவரால் போதிக்கப்பட்டு தூண்டப்படுகிறோம். அவர் நமக்காக மன்றாடும்போது வாக்குக்கடங்காத பெருமூச்சுகளுடன் ஜெபிக்கிறார்.

அனேக வருடங்கள் நான் இதை அறியாதிருந்தேன். தேவன் ஜெபத்தில் ஒரு புதிய புரிந்து கொள்ளுதலையும், சந்தோஷத்தையும், வல்லமையையும் தந்தார். ஒரு புதிய ஆலயத்தில் பிரவேசித்து ஒரு புதிய பலிபீடத்திலே ஜெபிக்கச் செய்துவிட்டார். நான் ஜெபித்தால் அது நானல்ல, ஆவியானவரே ஜெபிப்பதால் என்னிலுள்ள ஆவியானவரே மன்றாடி ஜெபிக்கிறார்.

**ஆவியானவர் நமது பலவீனங்களில் உதவி செய்கிறார்**

ஆவியானவர் ஜெபத்தைப் போதிக்கிறவரும் தூண்டுகிறவருமாயிருக்கிறார். எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதை நாம் அறியாதவர்கள் என்றும் நமது விண்ணப்பங்கள் மிக அவசரமானவையென்றும் நமக்குத் தோன்றுகின்றன. ஆனால் அவற்றை ஆழமாக சிந்தித்து நமது உண்மையான தேவை எது எனக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு ஆழமாகவோ, தூரமாகவோ இருக்கின்றன.

பொதுவாக மக்கள் ஆரோக்கியம், சொகுசு, வீடு, சிறந்த நண்பர்கள், இன்பங்கள், சற்று அதிகமான பணம், வெற்றி ஆகியவற்றை விரும்புகிறார்கள். ஆனால் இவை எதுவுமே மேலானவையல்ல. தேவன் ஆழமாகவும், தூரமாகவும் பார்த்து வேறு காரியங்களை விரும்புகிறார்.

தூய ஆவியானவர் கிறிஸ்துவின் சிந்தையையும் தேவ சித்தத்தையும் அறிவார். அவர் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும் போதிக்கிறார். ஞானத்தில் குறைவுள்ளவன் தேவனிடத்தில் கேட்க வேண்டும். அவர் ஞானத்தோடு போதித்து, பலப்படுத்தி வழிநடத்தக்கூடிய ஆவியைத் தருகிறார்.

தூய ஆவியானவர் ஜெபத்திற்குரிய நிபந்தனைகளை உருவாக்குகிறவர். நமது விருப்பங்களை சுத்திகரித்து, தேவ சித்தத்திற்கு நேராக நடத்துவார். எனவே அவர் விரும்புவதை நாமும் விரும்பச் செய்வார். இதனால் நாம் கர்த்தரில் களிகூர்ந்து, அவர் நமது இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவார் என்ற நிச்சயத்தைப் பெறுவோம். அவரது விருப்பமே நமது விருப்பமாகும். ஆவியானவர் அனேக காரியங்களை வெளிப்படுத்துவார். அவரது பெருமூச்சுகள் நமது ஜெபத்தை முந்திக்கொள்ளும். அவருடைய வியாகுலத்தோடுதான் நமது ஜெபங்கள் பிறக்கின்றன. அவரில்தான் நமது ஜீவன், விருப்பம், ஞானம், விசுவாசம், மன்றாட்டு வல்லமை ஆகிய அனைத்து நன்மைகளின் ஆதாரமுமிருக்கிறது. அவர் நமது விருப்பங்களை உயிர்ப்பித்து, எதிர்பார்ப்புகளை சுத்திகரித்து, உறுதியினை பலப்படுத்தி, விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறார்.

**ஆவியானவரின் ஜெபம்**

ஜெபம் என்பது கேட்பதை விட மேலானது. ஒரு உறவு, ஐக்கியம், ஒத்துழைப்பு மட்டுமின்றி பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு, தூய ஆவியானவர் இவர்களோடுள்ள தொடர்பு என்று கூறலாம். ஜெபம் வார்த்தைகளை விட மேலானது. ஏனெனில் வார்த்தைகளில்லாமலே பலத்த காரியங்களை ஜெபம் செய்கிறது. அது கேட்பதை விட மேலானது. ஏனெனில் எதையும் கேட்காமலேயே உயர்வைப் பெறுகிறது. தன் அலுவலக அறைக்குள் நுழைந்த சிறிய மகனைப் பார்த்து, 'என் மகனே உனக்கு என்ன வேண்டும்?' என்று தந்தை கேட்க, மகன் 'ஒன்றுமே வேண்டாம் உங்களோடிருக்க வந்தேன்' என்று கூறுவது போன்ற அனுபவம் இது.

ஆவியானவரின் இந்த இரகசியம் பிற இரகசியங்களுக்குத் திறவுகோலாயிருக்கிறது. ஆண்டவரின் இரகசியம் ஆவியானவரின் ஐக்கியத்தில் ஜெபிக்கிறவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஒரு நிலையில் நாம் ஜெபித்து அவருடைய உதவியை நாடுகிறோம். அவர் ஜெபிக்க நாம் ஒத்துக்கொள்வதால் அவரது ஜெபம் நம்முடையதாகிறது. அவர் நமது இருதயமாகிய அவரது ஆலயத்தில் ஜெபிக்க, சதாகாலங்களிலும் ஜீவிக்கிற அவர் பிதாவின் வலது பாரிசத்திலிருந்து கொண்டே நமக்காக மன்றாடுகிறார். நமது ஆவியிலுள்ள ஆவியானவர் நம்மில் கிரியை செய்ய சித்தம் கொண்டு, பரலோக பிதாவின் விருப்பத்தை நிறைவேற்ற ஜெபிக்கிறார். ஆவியானவர் திரியேக தேவனைப் பிரதிபலிக்கிறவர். அவரே நம்மில் வல்லமையாகக் கிரியை செய்கிறார். இருதயங்களை ஜெபத்தில் ஒருமுகப் படுத்தி அவைகளை மன்றாட்டில் இணைக்கிறார். ஜெபத்திற்குரிய பதிலின் உறுதி அவரிடமிருந்து வருகிறது. ஜெபத்தை வல்லமையுடையதாக்குகிறவர் அவரே. ஜெபத்திற்குரிய அனைத்து இரகசியங்களும் அவருக்குள்ளிருக்கின்றன. சகல வல்லமையும் அவருடையதே. தேவன் எனக்குச் செய்த மிகப்பெரிய காரியம் நான் ஆவியில் ஜெபிக்கும்படி எனக்குக் கற்றுத் தந்ததாகும்.

ஆவியால் நாம் நிரப்பப்படும் வரைக்கும் நாம் சிறந்த ஜெபவீரர்களாயிருக்க முடியாது. 'ஆண்டவரே ஆவியில் நிரம்பி ஜெபிக்க எங்களுக்குக் கற்றுத் தாரும்'.

## ஜெபிப்பதற்காக எங்கும் பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்துங்கள்

***Set the saints everywhere to praying***

Sarah Foullkes Moore

சபையும், உலகமும் பலத்த போராட்டத்திலிருக்கின்றன. இந்த ஆவிக்குரிய போராட்டம் வலுவடைந்து வருகிறது. கடைசி நேரத்திற்கான அந்தகார ஆதிக்கங்கள் பெருகுகின்றன. சபை போராட பயன்படுத்த வேண்டிய போராயுதம் முழங்கால் ஒன்றே. முழங்கால் வெற்றியைத் தருவது உறுதி. எனவே ஒவ்வொரு சபையிலும், இல்லத்திலும், சமுதாயத்திலும் தேவ பயமுள்ள மன்றாட்டு வீரர்கள் எழும்ப வேண்டும். அராஜகம், துன்மார்க்கம், நாஸ்திகம், அரசியல், சுரண்டல் போன்றவை அதிகரிக்கும் நிலையில் விசுவாசத்தோடு ஜெபித்து திறப்பின் வாசலில் நிற்கிற தேவ பிள்ளைகள்தான் தேவனுக்கு இன்று மிகவும் தேவை.

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" எசேக்.22:30. இஸ்ரவேலின் பரிதாபமான நிலை இது. தேசத்தின் திறப்பிலே நிற்க ஒருவரும் காணப் படாதபடியால் தேசம் அழிக்கப்பட்டது. குழப்பமும், இக்கட்டும் நிறைந்த இந்த காலத்தில் உங்கள் சபையிலும், உங்கள் சமுதாயத்திலும் திறப்பிலே நிற்க யாருமில்லையா? ஆபத்தைக் கண்டு தொடர்ந்து போராடி அந்தகார அதிபதிகளுக்கு எதிராகவும், அதிகாரங்களுக்கு எதிராகவும் ஆவிக்குரிய பொல்லாப்புகளுக்கு எதிராகவும் போராடி ஜெபிக்கிறவர்கள் இல்லையா?

கடந்த கால சரித்திரத்தில் இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளில் தேவன் தமது பிள்ளைகளுக்கு இரக்கம் காண்பித்து சிலரைக் கண்டுபிடித்து அவர்கள் மூலம் கிரியை செய்து விடுதலைகளை அளித்திருக்கிறதை அறிவோம். எல்லா தேசங்களிலும் பகைவனுக்கு எதிராக சிலரை எழுப்பி அவர்கள் திறப்பின் வாயிலில் நிற்கும்படி செய்துள்ளார். அவர்களில் தேவன் அவசர தேவையின் ஆழமான உணர்வை எழுப்பி அவர்கள் தேவனுடைய தலையீட்டிற்காக மன்றாடச் செய்திருக்கிறார்.

எல்லா சபைகளிலும், சமுதாயங்களிலும், இல்லங்களிலும் தேவ பிள்ளைகளை ஜெபிக்கும்படி தூண்டி எழுப்பும் தலைவர்கள் தேவை. நிலைமைகளைக் குறித்து விவாதித்துக் கொண்டிருப்பதும், தேவைகளை எண்ணிக் கொண்டிருப்பதும் பயன் தருவதில்லை. மக்களை ஜெபிக்க வைப்பதுதான் இன்றியமையாததும் ஆனால் சிரமமானதுமாயிருக்கிறது. ஜெபிக்கும் தலைவர்கள் எழும்பி பிரசங்கிக்கிறவர்களையும் சபைகளையும் ஜெபிக்க வழிநடத்த வேண்டும்.

**ஜெபம் ஒரு போராட்டம்**

ஜெபம் என்பது தீவிரமாக ஜெபதியானத்தில் சமயத்தை செலவிடுவது என்று பொருள் கூறலாம். இதில் இருதயமும் ஆத்துமாவும் இணைந்தாலும் மாம்சம் இதனை விரும்புவதில்லை. ஜெப பாரத்திற்குள் நம்மை

(8-ம் பக்கம் பார்க்க)

# மன்றாட்டு மட்டுமே நியாயத்தீர்ப்பைத் தடுக்க முடியும்

## *Intercession can avert judgement*

Alwhittinghill

இந்நாட்களில் அசைக்கக்கூடிய யாவற்றையும் தேவன் அசைத்துக் கொண்டிருக்கிறார். இதனால் அசைக்கப் படக்கூடாதவைகளின் உண்மையான மதிப்பு தெளிவாகப் புரிந்து கொள்ளப் படும். "நான் கர்த்தர் நான் மாறாதவர்" *மல்.3:6* என்று தேவன் சொல்கிறார். அனேகர் சரியான பதிலுக்காக ஆவலோடு காத்திருந்து தேவனுடைய மாறாத சத்தியமான கிரியைகளைக் கண்டு கொள்கின்றனர். "கர்த்தர் உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணும்மட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது" *ஓசி.10:12.* இந்த அவசர செய்தியை சமீபகால சம்பவங்களும், சரித்திரமும் தெளிவாக அறிவிக்கின்றன. காலம் கடந்துவிட்டது உண்மை! நமது தேசம் தேவனுடைய உடனடி நியாயத்தீர்ப்புக்குப் பக்குவமாயிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் தேவனிடமிருந்து கேட்ட வார்த்தையை மக்களுக்காக ஜெபத்தின் மூலம் அறிவிக்கிற ஜாமக்காரர்களும் செய்தியாளர்களும் எங்கே?

மனித சமுதாயம் மாம்சத்தின் வழியில் தூக்கத்திற்கு நேராக வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. எப்பக்கத்திலுமுள்ள எச்சரிக்கை சம்பவங்களும், வேத அடிப்படையிலான அடையாளங்களும், தேவனுக்குப் பிரியமற்ற சம்பவங்களும் நடப்பதை ஒவ்வொரு நாளும் காண்கிறோம். இவற்றைக் கண்டு 'துன்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன' என்ற ஆழமான உணர்வை நாம் அனைவரும் அடைகிறோம். இந்த முன்னடையாளங்கள் யாவும் சீக்கிரமாக வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை நமக்குக் காண்பிக்கின்றன. மனிதன் தீர்வு காண வேண்டிய பிரச்சனைகளாக இவை கருதப்பட்டாலும், "மனுஷனுடைய உதவி விருதா" என்று *சங்.108:12* கூறுகிறது. காயங்கள் ஆற்றப்பட ஆண்ட வராகிய இயேசுவின் உதவியே வேண் டும். ஆண்டவருடைய நாமத்திலேயே நமது ஒரே நம்பிக்கையிருக்கிறது. சபையானது தேவனை அவர் இருப்பது போலவே கண்டு அறிவிக்க வேண்டும். ஜெபத்தோடும் தாழ்மையோடும் அவருக்கு நேராகத் திரும்ப வேண்டும். நமது தேவை எழுப்புதல்! இல்லாவிட்டால் தேவனை மறந்த முந்தைய தேசங்களைப் போல நமது தேசங்களும் இல்லாமலாகிவிடும். உண்மையான மனந்திரும்புதலும், உத்தம விசுவாசமும் தேவனுடைய இரக்கத்தைப் பெற ஏதுவாகும். எக்காளம் ஊதி இந்த செய்தியை சபைகளுக்கும் தேவ ஜனத்திற்கும் அறிவிப்பது நமக்குத் தரப்பட்ட சிலாக்கியம்.

ஏசாயாவின் நாட்களில் ஜனங்கள் உண்மையான தேவ உறவை விட்டு விலகிப் போனபடியால் இளைத்துப் போனார்கள். துன்பங்களால் குழப்பமடைந்தனர். மாம்ச சிந்தையால் ஆசீர்வாதங்களை இழந்தனர். அவர்கள் ஏசாயாவிடம் வந்து ஏன் காரியங்கள் நன்றாக நடக்கவில்லை என்று விசாரித்தனர். அதற்கு தேவன் அளித்த பதிலை *ஏசா.59:1-15* வசனங்களில் படித்து தியானிப்பது நலம். அக்காலத்திற்கும் இக்காலத்திற்குமுள்ள நிலைமை ஒன்றே.

தேவன் இரக்கம் காண்பிக்க விரும்பினார். எனவே இவ்வாறு பதிலளித்தார் : *விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார் வச.16.* இதை *ஏசா.63:5-ல்* மறுபடியும் காணலாம். உண்மையான மன்றாட்டும் ஊக்கமான ஜெபமும் தேவ ஜனத்திடம் காணப்பட தேவன் விரும்புகிறார். தாம் தெரிந்து கொண்ட ஜனம் நியாயம் என்ற நிறைகல்லால் நிறுக்கப்பட அவர் காத்திருக்கிறார். இதன் மூலம் உடனடி நியாயத்தீர்ப்பு தடுக்கப்படுகிறது. அவர் பரிசுத்தர் நம்மிடம் பரிசுத்தத்தை விரும்புகிறார்.

இயேசுவின் நாமத்தில் இரக்க ஆசனத்தில் ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு ஜெபத்திலும் பரிசுத்தத்தை எதிர்பார்க்கும் அவர் நியாயத்தீர்ப்பிலிருந்து நம்மை விடுவிக்கக்கூடியவர். ஆனால் தேவ ஜனத்தின் மத்தியிலும் தேசத்திலும் பாவம் பெருகி வருகிறதே. தேசத்திற்காக நாம் திறப்பின் வாசலில் நிற்கும்போது ஆண்டவராகிய இயேசுவோடு நாம் இந்த ஜெப ஊழியத்தில் பங்குகொள்வதால் தேவ இரக்கம் காண்பிக்கப்படுகிறது. எசேக்கியேலின் நாட்களிலும் இதே அடிப்படையிலான நியாயத்தீர்ப்பு ஏற்பட்டது. அப்போது தேவனது வார்த்தைகளை *எசேக்.22:23-31* வசனங்களில் படியுங்கள். மோசே தேசத்தைப் பாதுகாப்பதற்காக மன்றாட்டுகளை ஏறெடுத்தான் *சங்.106:23.* "அவர்களை அவர் அழிக்காதபடிக்கு அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்."

"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாகக் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" *எபி.4:16.*

(7-ம் பக்க தொடர்ச்சி)

நுழைப்பதும் மிகவும் கடினமான உழைப்பாகத் தென்படுகிறது. ஏனெனில் இந்நாட்கள் சுகபோகங்களையும், சொகுசு வாழ்வையும் விரும்புகிற நாட்களாயிருக்கினறன. சீயோனின் பிள்ளைகள் இரட்டு உடுத்தி உபவாசத்தோடும், புலம்பலோடும் ஜெபிக்க விரும்பவில்லை. "சீயோனிலே நிர்விசாரமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ!" *ஆமோஸ் 6:1.*

இது இந்த யுகத்தின் முடிவுக்கான இக்கட்டான காலம் என்பதை எண்ணி வேதனைப்பட வேண்டும். ஜெபத்தின் தேவை, அவசரம் ஆகியவற்றை நாம் கண்டு நிலைமைகளை சந்திக்க தேவன் சந்திக்கும்படி ஜெபிக்க வேண்டும். தேவனோடு நல்லுறவிலிருக்கும் மக்கள் ஜெபத்தை மிக மேன்மையான வாஞ்சையாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேவனுக்கும் நாட்டிற்கும் அவர்கள் செய்யும் மிகப் பெரிய பணி மன்றாடுவதுதான். "கர்த்தாவே நீர் உமது ஜனத்தைத் தப்ப விட்டு, புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும். நிந்தைக்கும் உமது சுதந்தரத்தை ஒப்பு கொடாதிரும்" *யோவே.2:17.*

ஜெபம் மட்டுமே தேசத்தை இரட்சித்து குழப்பங்களிலிருந்து பாதுகாக்க முடியும். எழுப்புதலின் தேவையைக் குறித்து திறமையாகப் பிரசங்கிக்கிறவர்களும், எழுதுகிறவர்களும் ஏராளமுண்டு. ஆனால் அவர்களில் பலர் இந்த அழிவின் காலத்தில் ஜெபத்திற்காகத் தங்களை அர்ப்பணிப்பதில்லை. எனவே மிக முக்கியமான போர்க்களம் ஜெபிக்கும் களம் என்றால் தவறல்ல. ஜெப சேனைகள் அழைக்கப்பட வேண்டும். சபை முழங்காலுக்கு முன்னேற வேண்டும். உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் ஜெபத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

தேவ பிள்ளைகளின் ஜெபத்திற்குப் பதிலாக எழுப்புதல் ஏற்படுவது நிச்சயம். எனவே அவசர விண்ணப்பங்களும் ஊக்கமான வேண்டுதல்களும் ஏறெடுக்கப்பட்டு பரிசுத்தவான்களை ஜெபிக்கச் செய்ய வேண்டும்.

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

***Book Packets contains periodicals***

To

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*